காலை முரசு

பக்கங்கள்:-22

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 02 | செவ்வாய்க்கிழமை 15.04.2025 | அதிர்வு 253

## 4 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் நால்வர் நேற்று சிக்கினர்!

நான்கு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான ஹசீஸ் மற்றும் கொக்கேயின் போதைப்பொருட்களுடன் நான்கு இளைஞர்கள் கட்டுநாயக்க 07




# ரவுடித்தனப் பாணியில் சந்திரசேகரின் பேச்சு!

## காடைத்தனமாகச் செயற்பட தொடங்கியுள்ளது அரசு என்று தமிழரசுச் செயலர் சுமந்திரன் சீற்றம்

(ந.லோகதயாளன்)

அமைச்சர் சந்திரசேகரின் ரவுடித்தனமான பேச்சு, காடைத்தனமான முறையில் அரசாங்கம் செயற்பட ஆரம்பித்திருக்கின்றது என்பதனையே காட்டுகின்றது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். 06

# யானை தாக்கி இளம் குடும்பஸ்தர் சாவு!

## சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று வெல்லாவெளியில் சோகம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 37 ஆம் கிராமத்தில் சித்திரைப் புத்தாண்டு தினமான நேற்று அதிகாலை, காட்டு யானையின் தாக்குதலில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில், வீட்டு முற்றத்தில் நண்பர்களுடன் புத்தாண்டைக் கொண்டாடி விளையாடிக் கொண்டிருந்த 31 வயதுடைய இராசதுரை சசிகரன் என்பவர், சத்தம் கேட்டு வீட்டு வாசலுக்கு வந்தபோது, எதிர்பாராதவிதமாக யானையின் தாக்குதலுக்கு உள்ளானார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார். 07




தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தை தென்னிலங்கை கட்சிகள் எப்படிப் பார்க்கின்றன, தமிழ்த் தேசியக் கட்சிகள் எப்படி அணுகுகின்றன என்பது கவனிக்கத்தக்க ஒரு விடயம்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கும் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ள ஜி.எஸ்.பி. வரிச்சலுகை மிக முக்கியமானது. நாடு பொருளாதார உயிர் மூச்சு விடுவதற்கான ஒரே வருமானம் – அந்நிய செலாவணி ஈட்டல் – முறைமை அதுதான்.

அதனை இழக்கும் ஆபத்து நாட்டுக்கு இப்போது வந்துள்ளது.

அது தொடர்பில் அரசு இப்போது கவலைப்படத் தொடங்கி உள்ளது. இந்த வரிச் சலுகையை எப்படியாயினும் தக்க வைக்க வேண்டும் என்பது அரசு தரப்பில் தவிர்க்க முடியாத – கட்டாய – எதிர்பார்ப்பு.

இந்த வரிச்சலுகை நீடிப்பதைப் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஒத்துழைப்பை வழங்கும் என 06

# பஸ் – ராணுவ வாகனம் நேருக்கு நேர் மோதல் ஒருவர் உயிரிழப்பு; 27 பேருக்குப் படுகாயம்

## கந்தளாய் அக்போபுரவில் புதுவருடத்தன்று காலை கோர விபத்து






(எஸ்.கீதபொன்கலன்)

**திருகோணமலை - கந்தளாய் அக்போபுர பிரதேசத்தில், தனியார் பஸ்ஸும் இராணுவத்தின் ட்ரக்கும் நேருக்கு நேர் மோதி, ஏற்பட்ட விபத்தில், ஒருவர் பலியான அதேவேளை, 27 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.**

இந்த கோர விபத்து கந்தளாய் பிரதேசத்தில், அக்போபுர பொலீஸ் பிரிவுக்குட்பட்ட 86 ஆவது மைல் கல்லில், புதுவருட தினமான நேற்றுக் காலை இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

கண்டி, மாவனல்ல, உயன்வத்த பகுதியில் இருந்து, 26 உள்ளூர் சுற்றுலா பயணிகளுடன் திருகோணமலை நோக்கி வந்த, தனியார் பஸ் ஒன்றும், திருகோணமலையிலிருந்து தென் பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினரின் ட்ரக் ஒன்றும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸில் பயணித்த, 25 வயதான மாவனல்ல பிரதேசத்தைச் சேர்ந்த, முகமட் அஸ்கர் முகமட் அர்சாத் என்பவர் உயிரிழந்துள்ளார் எனவும் 25 பயணிகள் படுகாயங்களுடன், கந்தளாய் மற்றும் திருகோணமலை ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், விபத்து நடந்த இடத்தில், விபத்துக்குள்ளான பஸ்ஸுக்குப் பின்னால் சென்று கொண்டிருந்த கெப் வாகனம், அந்த பஸ்ஸுடன் மோதியதால், அதில் பயணம் செய்த சிறுவன் ஒருவன் படுகாயம் அடைந்துள்ளான் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை அக்போபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# தமிழரசுக் கட்சி குறித்து கஜேந்திரகுமார் தவறான கருத்துகளைப் பரப்புகின்றார்!

## பொதுச் செயலாளர் சுமந்திரன் விசனம்




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு குறித்து வேண்டும் என்று தவறான கருத்துக்களை தமிழ் மக்கள் முன்வைத்து, நிலைமைகளை குழப்புகிறார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் என விசனத்துடன் தெரிவித்திருக்கின்றார் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

நேற்று பத்திரிகையாளர் சந்திப்பில் தம்மிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதில் அளித்த போது அவர் இவ்வாறு விசனத்துடன் விடயத்தை குறிப்பிட்டார்.

“உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ் தேசியக் கட்சிகள் இம்முறை தங்களுக்குள் மோதிக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்ற ஓர் உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. அதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இணங்கி இருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனால், தேசிய மக்கள் சக்தி மற்றும் தென்னிலங்கைக் கட்சிகளை எவ்வாறு விமர்சிக்கின்றோமோ அதே போல தமிழரசுக் கட்சியையும் விமர்சிக்க வேண்டும் என்பது போல தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் கூறியிருக்கிறார். “ஏக்கியராஜ்ய” என்ற அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியோடு தமிழரசுக் கட்சி இணங்கி போவதால் அவர்களை எப்படி விலக்கிப் பார்க்க முடியும் என்ற சாரப்பட அவர் வினாவெழுப்பி பேசியிருக்கின்றார். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?” - என்று கேள்வி எழுப்பப்பட்டது. அந்தக் கேள்விக்கு சுமந்திரன் அளித்த பதில் வருமாறு:-

அப்படி கஜேந்திரகுமார் நடந்து கொள்வது துரதிஷ்டவசமானது. அவர் அப்படி நடந்து கொள்கின்றார் என்பதற்காக ஏற்கனவே நாங்கள் எடுத்த முடிவிலிருந்து நான் மாற விரும்பவில்லை. அவர்களை நாங்கள் விமர்சிக்கப் போவதில்லை.

ஆனால் மக்கள் மத்தியில் சில குழப்பங்களை ஏற்படுத்தும் விதமான கருத்துக்கள் விதைக்கப்படுகின்றன. அவை குறித்துத் தெளிவுபடுத்துவோம். நாங்கள் ஏக்கியராஜ்யவுக்கு எதிரானவர்கள். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இன்றைய அரசமைப்பில் “ஏக்கிய ராஜ்ய” என்று “ஒற்றையாட்சி”க்குச் சொல்லப்படுகின்ற பதத்துக்கு நாங்கள் முற்றிலும் எதிரானவர்கள். ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதை தமிழ் மக்களுக்கு தமிழில் பேசும் போதும் ஏன் ஏக்கியராஜ்ய என்று சிங்களத்தில் கூறுகிறார் என எங்களுக்கு விளங்கவில்லை. தமிழ் மக்களோடு பேசும் போது தமிழில் அதைப் பேசாமல் சிங்களத்தில் அந்தச் சொல்லாடலை ஏன் அவர் பயன்படுத்துகிறார்? ஏக்கிய ராஜ்ய என்று அவர் சொல்லுகிறார். ஏன் அதை அவர் ஒற்றையாட்சி என்று தமிழில் சொல்லவில்லை?

நாங்கள் அந்த ஒற்றையாட்சி முறைமைக்கு எதிரானவர்கள். இணங்காதவர்கள். சரி ஆங்கிலத்தில் சொல்வதானால் Unitary State என்பதற்கு நாங்கள் எதிரானவர்கள்.

ஒற்றையாட்சி - Unitary State என்ற அர்த்தத்தில் பாவிக்கப்படுகின்ற ஏக்கியராஜ்ய என்ற விடயத்துக்கு நாங்கள் எதிரானவர்கள். அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள்.

ஆனால் அவர் என்ன சொல்லப் பார்க்கிறார்?

2016 - 2019 காலப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அரசமைப்பு வரைவிலே அந்தச் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த சொல் தனியாக பயன்படுத்தப்படவில்லை. அதனைத் தவறாக அர்த்தப்படுத்தி, மக்களை பிழையாக அவர் வழிநடத்த முயல்கிறார்.

பாதிக்கப்பட்ட சொற்றொடர் “ஏக்கிய ராஜ்ய / ஒருமித்த நாடு“ என்பதாகும்.

அங்கு “ஏக்கியராஜ்ய” என்று சொல்வது ஒரு நாடு. “ரஜய” என்று சொன்னால்தான் அரசாங்கம் அல்லது ஆட்சி முறை.

இது தமிழ் மக்கள் பலருக்கு தெரியாத விடயமாக இருக்கலாம். ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு நன்கு தெரியும். அவருக்குத் தமிழை விட சிங்களம் நன்கு தெரியும். அவர் தெரிந்து கொண்டுதான் இப்படி மக்களை பிழையாக வழிநடத்துகிறார்.

அங்கு “ஏக்கிய ரஜய”என்ற சொல்லு பயன்படுத்தப்படவில்லை. ஏக்கியராஜ்ய - ஒரு நாடு - என்று பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஒரு நாடு என்பதைத்தான் தமிழில் ஒருமித்த நாடு என்று சொல்லப்பட்டது அது மட்டுமல்ல, அந்தச் சொற்றொடர் பயன்படுத்தப்பட்ட அந்த உறுப்புரையிலேயே அதற்கு வரைவிலக்கணமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. என்ன சொல் பயன்படுத்தப்பட்டாலும் அங்கே பயன்படுத்தப்படும் அந்தச் சொல்லின் அர்த்தம் இதுதான் என்பது அங்கு குறிப்பிடப்பட்டிருந்தால் அதுதான் அந்தச் சொல்லின் அர்த்தம்.

வரைவிலக்கணம் என்ன சொல்லுகிறது?

“மத்தியிலும் மாகாணங்களிலும் அரசமைப்பில் சொல்லப்பட்ட படி அதிகாரங்களைப் பிரயோகிக்கின்ற நாடு” என்று விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் மத்தியிலும் மாகாணங்களிலும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது? இது ஒற்றையாட்சி அல்ல என்பதைக் குறிப்பதற்குத்தான். ஒற்றை ஆட்சி என்றால் மத்திய அரசினால் மாத்திரம் அதிகாரங்கள் பிரயோகிக்கப்படும்.

இந்த விடயம் அதே உறுப்புரையில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

சில சட்டங்களில் பயன்படுத்தப்படும் சொல்லாடல்களின் விளக்கங்களை - அர்த்தங்களை - சட்டத்தின் கடைசி உறுப்புரையிலே என்ன சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று குறிப்பிடுவார்கள். ஆனால் இது அப்படி அல்ல.

இதில் அதே உறுப்புரையிலேயே விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதை வாசிக்கும் போதே அதன் அர்த்தம் புரியக்கூடியதாக எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது மத்தியிலும் மாகாணங்களிலும் அரசமைப்பில் சொல்லப்பட்ட படி அரச அதிகாரங்களைப் பிரயோகிக்கின்ற நாடு எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆகையினால் அது ஒற்றையாட்சியை அல்ல, மத்தியிலும் மாகாணங்களுமாக பத்து அலகுகளிலே அதிகாரங்கள் பிரயோகிக்கப்படுகின்ற நாடு என்று கருப்பு - வெள்ளையிலேயே தெளிவாக எழுதப்பட்டிருக்கின்ற போது, அதைப்பற்றி பேசாமல், அந்த சொற்றொடரின் முழு வடிவத்தையும் பயன்படுத்தாமல், வேண்டுமென்றே தமிழில் பேசுகின்ற போதும் “ஏக்கிய ராஜ்ய” என்ற சிங்களச் சொல்லைச் சொல்லிக் கொண்டு, மக்களை தவறாக வழி நடத்துகிறார் கஜேந்திரகுமார். இது துரதிஷ்டவசமான விடயம்.

அவரை விமர்சிப்பதற்காக இதனை நான் சொல்லவில்லை. நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்காக மட்டும் சொல்லுகிறேன். தமிழ்க் கட்சிகளை நாங்கள் விமர்சிக்க போவதில்லை. - என்றார்.















# ஊடகவியலாளர் ஜெயம் ஜெகனின் நாட்டார் இலக்கிய நூல் வெளியீடு

(பா.சதீசன்)

ஊடகவியலாளர் ஜெயம் ஜெகனின் புழுங்கலரிசியும் புழுக்கொடியலும் எனும் நாட்டார் இலக்கிய நூல் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு இஷானியா கலாமன்றத்தில் வைத்து வெளியிடப் பட்டிருந்தது.

ஆய்வாளரும், முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளருமான ஜெயம் ஜெகனின் ஆறாவது நூலான “புழுங்கலரிசியும் புழுக்கொடியலும்” எனும் நாட்டார்



இலக்கிய நூல் வெளியீட்டு விழாவானது புதுக்குடியிருப்பு இஷானியா கலாமன்றத்தில் இடம்பெற்றிருந்தது.

இஷானியா கலாமன்றத்தின் இயக்குநரும், நிறுவுனருமான கலாநிதி சமூக திலகம் வை.கமலராஜா தலைமையில், கவிஞர் யோ. புரட்சியின் நிகழ்ச்சி தொகுப்பில்

விருந்தினர்கள் வாண்ட் வாத்தியத்தியம் முழங்க சிறுவர்களின் நடன நிகழ்வுடன் வரவேற்று வரப்பட்டு மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கமலராஜா வசந்தாதேவி (ஜேர்மன்), பிரபல தொழிலதிபரும் நடன ஆசிரியருமான மதனதீபன் நிரோஷா (கனடா), கலாநிதி பொ.பேரின்பநாயகம், சிறப்பு விருந்தினராக சர்வதேச சாதனையாளர் அகிலத்திருநாயகி, மாவட்ட செயலகம் சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் இ.மதியரசி, யோகம்மா கலைக்கூட நிறுவுனர் நேசமணி குமாரு யோகேஸ்வரன், மற்றும் கலைஞர்கள், பொதுமக்கள், இஷானியா கலாமன்றத்தின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான ஜெயம் ஜெகனிற்கான கௌரவமும்,அவரின் பெற்றோருக்கான கௌரவமும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது. அத்துடன் இஷானிய கலாமன்றத்தின் இயக்குநரும், நிறுவுனருமான கலாநிதி சமூக திலகம் வை.கமலராஜாவின் படம் பொறிக்கப்பட்ட இலங்கை தபால் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்ட உத்தியோகபூர்வ முத்திரையும் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.












# 600 மில்லியன் ரூபாயை வருமானமாக ஈட்டியது இலங்கை போக்குவரத்து சபை

கடந்த 4 நாள்களில் இலங்கை போக்குவரத்து சபை, 600 மில்லியன் ரூபாயை வருமானமாக ஈட்டியுள்ளது.

பண்டிகைக் காலத்தையொட்டி அதிகளவான பேருந்துகள் சேவையில் ஈடுபட்டமையினால் இந்த வருமானத்தை ஈட்ட முடிந்துள்ளது.

நாளொன்றுக்கு சுமார் 200 மில்லியன் ரூபாய் வரை வருமானமாக ஈட்ட முடிந்ததாக அதன் பிரதிப் பொது முகாமையாளர் ஆர்.டி சந்திரசிறி குறிப்பிட்டார்.

இந்த வருடம் தமிழ்,சிங்களப் புத்தாண்டையொட்டி பொதுமக்களின் வசதிக்காக சுமார் 350 பஸ்கள் மேலதிகமாக இயக்கப்பட்டதாக அவர் கூறினார்.



# அதிவேக நெடுஞ்சாலையில் 134 மில்லியன் ரூபா வருமானம்

அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த 3 நாள்களில் மட்டும் கிடைத்த வருமானம் 134 மில்லியன் ரூபாவை தாண்டியுள்ளது.

ஏப்ரல் 11, 12 மற்றும் 13 ஆகிய மூன்று நாள்களில் இந்த வருமானம் கிடைத்ததாகப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி என்ற முறையில் அரசை எதிர்க்க வேண்டும் என்றாலும், இது நாட்டின் பொது - அடிப்படை - அத்தியாவசிய - பிரச்சினை என்ற காரணத்தினால் ஆளும்தரப்போடு சேர்ந்து நிற்க வேண்டிய கட்டாயம் - தவிர்க்க முடியாத கடப்பாடு - அவருக்கு உள்ளது.

ஆனால் தமிழ் கட்சிகளின் நிலைப்பாடு முற்றிலும் வேறானது. இது தொடர்பாக மூன்று தமிழ்க் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் கூறிய கருத்துக்களை பிறிதொரு தமிழ் ஊடகம் வெளியிட்டிருக்கின்றது. அதனை அப்படியே இங்கு கீழே தருகிறேன்.

நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தை தென்னிலங்கைத் தரப்புக்கள் எப்படி நோக்குகின்றன, தமிழ் தரப்புகள் எப்படிக் கையாளுகின்றன என்பதைக் கண்டறிய இது நல்ல உதாரணம்.

இனி அந்த மூன்று தலைவர்கள் தெரிவித்த கருத்தை தருகிறேன். கவனியுங்கள்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்கும் விடயத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கமும் தேர்தல்கள் வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்கி, தன் நிலைப்பாட்டையும் மாற்றியுள்ளது என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகவே, இலங்கைக்கு வருகை தரும் ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழு, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக அரசாங்கம் நீக்கும் வரையில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை உடன் நிறுத்துவதற்கான பரிந்துரைகளை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைக்கான கால எல்லை எதிர்வரும் 2027ஆம் ஆண்டு டிசம்பரில் நிறைவுக்கு வரவுள்ளநிலையில் அதனை நீடிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்வரும் வாரம் ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்புக்குழு இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

அப்பின்னணியில் கருத்து வெளியிடுகையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்கள்,

**கஜேந்திரகுமார்**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிக்கையில் -

இலங்கையில் பொருளாதார நெருக்கடிகள் நிலவுகின்றன. தொழில்துறையும் மக்களும் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள். அவ்வாறான நிலையில் வரிச்சலுகைகள் அவசியமானவை என்பது பொதுப்படையான விடயமாகும் என்பதில் எமக்கு மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆனால், இலங்கையில் பிரஜைகளுக்கான அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தச் சட்டம் தமிழர்களை இலக்கு வைத்து எவ்வாறு பயன்படுத்தப்பட்டதோ அதேபோன்று தான் ஜே.வி.பியையும் இலக்கு வைத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் பயன்பாட்டில் பாதிப்புக்குள்ளான அனுபவம் ஆளும் தரப்பில் உள்ளவர்களுக்கும் நன்றாகவே உள்ளது. அவ்வாறான நிலையில் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னதாக பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

ஆனால், அவ்விதமான நிலைப்பாட்டிலிருந்து அவர்கள் ஆட்சியில் அமர்ந்ததும் முழுமையாக மாறியிருக்கின்றார்கள். தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தை அவர்கள் பல்வேறு விதமான காரணங்களுக்காகப் பயன்படுத்தும் நிலைமைகளே உள்ளன. எம்மைப் பொறுத்தவரையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும். அதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. அச்சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிகளை எடுத்துள்ளது. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. - என்றார்.

**சுமந்திரன்**

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கையில்-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையில் கடந்த காலத்தில் இருந்த அத்தனை அரசுகளும் அதனை நீக்குவதாகவே கூறிவிட்டு இழுத்தடிப்புக்களைச் செய்து வந்திருந்தார்கள்.

அப்பின்னணியில் ஒரு கட்டத்தில் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சி காலத்தில் பிரதமராக இருந்தபோது பிரஸ்ஷெல்ஸுக்குச் சென்று, ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சுக்களை மேற்கொண்டு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவதாக உறுதியளித்துவிட்டு வந்திருந்தார்.

அதன் பின்னர் அவர் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு விழைந்தார். எனினும் அது கைகூடவில்லை. அதன்பின்னர் தீவிரவாத எதிர்ப்புச்சட்ட மூலத்தினை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதுவும் நிறைவேறவில்லை.

இந்த இரண்டு சட்டமூலங்களும் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பங்களில் ஜே.வி.பி. எதிர்க்கட்சியில் இருந்தது. அச்சட்டமூலங்கள் பற்றி உரையாடுவதற்காக அழைப்பு விடுக்கப்பட்டபோது அதில் பங்கேற்க முடியாது என்று ஜே.வி.பி. அறிவித்ததோடு பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்குவதுதான் தமது நிலைப்பாடு என்றும் குறிப்பிட்டது. தமது ஆட்சியில் நீக்கப்படும் என்றும் கூறியது.

எனினும், நாங்கள் நாடளாவிய ரீதியில் கையெழுத்து வேட்டையையும் கவனயீர்ப்புப் போராட்டங்களையும் நடத்தியுள்ளோம். அப்போது ஜே.வி.பியும் அதனை ஆதரித்துள்ளது.

தற்போது, அந்த வாக்குறுதிகளையெல்லாம் மறந்துவிட்டு மீண்டும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்குப் பதில் சட்டத்தை இயற்றுவதற்கு தயாராகின்றது. அநுர அரசாங்கத்தின் திடீர் கொள்கை மாற்றத்துடனான செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே அச்சட்டம் நீக்கப்பட வேண்டும்.

அதற்காக இலங்கை வருகின்ற ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பை குழுவானது ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்குவதற்கு முன்னதாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தி உடடினாக நீக்க வேண்டும் என்பதை உறுதியாகக் கோர வேண்டும். - என்றார்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக்கட்சிகளில் ஒன்றான பி.ஆர்.எல்.எவ்வின் தலைவரும் கூட்டணியின் ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில் -

தற்காலிக ஏற்பாடுகளாகக் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்டமானது, தற்போது வரையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தச் சட்டத்தை நீக்குமாறு நாம் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்திருக்கின்றோம். ஆனால், ஆட்சியில் இருந்த ஆட்சியாளர்கள் வாக்குறுதிகளை எமக்கும் வழங்குவார்கள். செய்ய மாட்டார்கள்.

ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச தரப்பினருக்கும் வாக்குறுதிகளை வழங்குவார்கள். ஆனால், அவர்கள் அந்த வாக்குறுதிகளை நடைமுறைப் படுத்துவது கிடையாது. பயங்கரவாதத் தடைச்சட்ட விடயத்தில் மட்டுமல்ல, பொறுப்புக்கூறல் விடயத்தில் இந்த நிலைமையே தற்போது வரையில் நீடிக்கின்றது.

தற்போது ஆட்சிக்கு வந்தவர்களும் இந்தச் சட்டத்தினை நீக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்திருந்தாலும் சில விசாரணைகளுக்காக பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்த வேண்டியிருப்பதாக கூறுகின்றார்கள். அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் நாட்டில் காணப்படுகின்ற குற்றவியல் சட்டங்கள் இறைமையைப் பாதுகாப்பதற்கும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் போதுமானவையாகவே உள்ளன.

ஆகவே, பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி தான் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அது ஏமாற்றும் தந்திரமாகும். ஆகவே தற்போதைய அரசாங்கமும் ஏமாற்றுச் செயற்பாட்டையே செய்கிறது,போலி வாக்குறுதியையே வழங்கியுள்ளது.

எனவே பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்படும் வரையில் ஐரோப்பிய ஒன்றியம் வரிச்சலுகையை நீக்க வேண்டும். அதன் மூலமாகவே அரசாங்கத்தினை வழிக்குக் கொண்டுவர முடியும். - என்றார்.

---

# ரவுடித்தனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

“இந்தப் புத்தாண்டிலே எமது மக்கள் புதிதான அணுகுமுறையில் செயற்பட வேண்டும், பயணிக்க வேண்டும் என்று நாங்கள் விநயமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

சென்ற நாடாளுமன்றத் தேர்தலிலே - அதிலும் விசேடமாகத் தமிழ் மக்களின் கலாசார, அரசியல், தேசிய உறைவிடமாகக் கருதப்படுகின்ற யாழ்ப்பாணத்திலே - தேசிய மக்கள் சக்திக்கு ஆணை கொடுத்திருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களித்தவர்ளை விடவும் 10 சத வீதமானவர்கள் குறைவாகவே நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தனர். இந்தச் சூழ்நிலையைச் சாதமாகப் பயன்படுத்தி

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் ஆதரவு கூட தமிழ்க் கட்சிகளுக்குக் கிடையாது, அது தேசிய மக்கள் சக்திக்கே கொடுக்கப்பட்டுள்ளது எனக் கூற அரசாங்கம் தலைப்படுகின்றது. இது ஒரு தவறான விம்பம்.

போட்டியிட்ட கட்சிகளில் அவர்களிற்கு அதிகப்படியான வாக்குகள் கிடைத்ததன் அடிப்படையில் அப்படியாகச் சொல்லுகின்றார்கள். அதை அடுத்து வருகின்ற முதலாவது தேர்தல் இது.

நாடாளுமன்றத் தேர்தலின்போது யாழ்ப்பாணத்தில் 25 சதவீதமான வாக்கை தேசிய மக்கள் சக்தி பெற்றது. அதற்கு அடுத்தபடியாக தமிழரசுக் கட்சி 20 வீதத்தை அண்மித்த வாக்கினைப் பெற்றது.

மே 6 இல் இடம்பெறவுள்ள 07

## ரவுடித்தனப்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ளூராட்சி சபைத் தேர்தலிலே வரும் முடிவு அரசாங்கம் சொல்லுகின்ற கூற்று உண்மையா, இல்லையா என்பதை சோதித்துப் பார்க்கின்ற தருணம். ஆகையினாலே நாம் நமது மக்களிடத்தில் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம். தேசிய மக்கள் சக்திக்கோ, தென்னிலங்கை கட்சிக்கோ ஆணை கொடுத்து விடவில்லை என்பதைக் காட்ட வேண்டுகின்றோம். நாடாளுமன்றத் தேர்தலில் கூடிய வாக்குகளைப் பெற்றதனால் அவ்வாறு காண்பிக்கப்படுகின்றது. அதனால் இந்தத் தடவை அப்படியாக வாக்களிக்காது தமிழ்க்கட்சிகளிற்கு வாக்களிக்குமாறு கோருகின்றோம்.

தமிழ்க் கட்சிகள் என்கின்றபோதும் பிரிந்து, பிரிந்து பலருக்கும் வாக்களிக்கும்போது நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெற்றதைப் போன்றேது இருக்கும். அதனால் ஒரு தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். இன்று நாட்டிலே சமஷ்டி ஆட்சி வேண்டும் என்பதை 75 ஆண்டுகாலமாக அடிநாதமாகக் கொண்டது தமிழரசுக் கட்சிதான். எனவே, தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து அந்த ஆணையை வழங்க வேண்டும்.

தமிழர் தேசம் முழுமையாக நாடாளுமன்ற உறுப்பினரைக்கொண்டு வியாபித்துள்ள ஒரே தமிழ்க் கட்சி தமிழரசுக் கட்சி மட்டும்தான். பிரிந்து ஏனைய உதிரிக் கட்சிகளிற்கும் வாக்களித்தால் அரசாங்கத்திற்கு ஆணை கிடைத்திருக்கின்றது என்பதைப் போன்ற தோற்றம் ஏற்படும்.

வடக்கு, கிழக்கில் தமிழரசுக் கட்சி 59 சபைகளில் போட்டியிடுகின்றது. அனைத்திலும் வெற்றி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

விசேடமாக இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சுத்தமான நாடு என – அதாவது கிளீன் ஸ்ரீலங்கா என – ஆட்சிக்கு வந்தார்கள். வந்தவுடன் அந்தக் கருப்பொருளில் ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பித்தனர். எல்லாவற்றையும் சுத்தமாக்குவது, சரியான முறையில் நடப்பது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அதிகாரத்திற்கு வந்தவுடன் முதல் தேர்தலின் போதே இதற்கு முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் செய்யாத அளவு தேர்தல் விதிமுறை மீறல்களை அவர்கள் நேரடியாகவே செய்கின்றார்கள்.

அமைச்சர் சந்திரசேகரின் ஓர் உரையைப் பார்த்தேன். அதில் அவர் எமது கூட்டத்தை நிறுத்தப் பார்த்தார்கள் என்கின்றார். மாற்றுக் கட்சியினரை, முன்னாள் தவிசாளரை "நரி" என்ற சொல் பிரயோகம் செய்தார். அதன்போது "அவர்களிற்கு விளையாடத் தெரிந்தால் எங்களிற்கும் விளையாடத் தெரியும்" – என்று ஒரு ரவுடிப் பாணியில் சவால் விடுகின்றார். அரசிடம் நான் நேரடியாக கேட்க விரும்புவது – இதுதானா உங்கள் கிளீன் சிறிலங்கா...?

நேரடியாகவே தேர்தல் விதிகளை மீறிக்கொண்டு, மீறுவது மட்டுமன்றி "ஓம், நாம் மீறுவோம். எங்களிற்கு அப்படி விளையாடத் தெரியும், நீங்கள் முடிந்தால் செய்து காட்டுங்கள்!" என்று சவால் விடுகின்ற அளவிற்கு காடைத்தனமான முறையில் அரசாங்கம் செயற்பட ஆரம்பித்திருக்கின்றது. இது வாக்காளர்களிற்கும் ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வர வேண்டும். ஊழலற்ற ஆட்சி, சீரான ஆட்சி, சரியான முறையிலே நாங்கள் நாட்டைக் கொண்டு செல்லுவோம், சட்டத்தை மதிப்போம், சட்டத்தின் ஆட்சிதான் நாட்டில் இருக்கும் என்றெல்லாம் சொல்லுபவர்கள், முதலாவது சந்தர்ப்பத்திலேயே, தங்களுடைய தேர்தலுக்காக வெளிப்படையாகச் சட்டத்தை மீறுகின்ற செயலிலே இறங்கியிருக்கின்றமையை மக்கள் கவனத்தில்கொள்ள வேண்டும்." – என்றார்.

# வெளிநாட்டு மதுபானப் போத்தல்களுடனும் சிகரெட்டுகளுடனும் பெண் ஒருவர் கைது!

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் மற்றும் சிகரெட்டுகளுடன் பெண் ஒருவர் கம்பஹா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் ஜா – எல, கொட்டுகொட பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்தப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரான பெண்ணிடமிருந்து 17 வெளிநாட்டு மதுபானப் போத்தல்களும், 40 ஆயிரம் சிகரெட்டுகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரான பெண் இந்த வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள் மற்றும் சிகரெட்டுகளை விற்பனை செய்யத் தயாராக இருந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பண்டிகைக் காலத்தில் சாரதிகளுக்கு அறிவுறுத்தல்

பண்டிகைக் காலத்தில் வாகனங்களை செலுத்தும் போது அவதானமாக செயற்படுமாறு வாகன சாரதிகளுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதன்படி, போக்குவரத்து விதிகளுக்கு அமைய வாகனங்களை செலுத்துமாறும், மது அருந்திவிட்டு வாகனம் செலுத்துவதைத் தவிர்க்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, புத்தாண்டை முன்னிட்டு 35 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 4 கோடி ரூபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைதான சந்தேகநபர்கள் கொழும்பு 15 பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரும், கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரும், பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய இளைஞரும், யக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞரும் ஆவர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபர்களில் மூவர் தாய்லாந்தின் பேங்கொக் நகரத்தில் இருந்து நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இதன்போது, விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து ஒரு கிலோ 616 கிராம் ஹசீஸ் போதைப்பொருள் மற்றும் ஒரு கிலோ 762 கிராம் கொக்கேயின் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் போதைப்பொருட்களை விமான நிலையத்துக்குக் கொண்டு வர சந்தேகநபர்களுக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் யக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமானநிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தாக்குதலில் படுகாயமடைந்த சசிகரனை, உறவினர்கள் உடனடியாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். எனினும், சிகிச்சை பலனளிக்காமல் அதிகாலை 1.30 மணியளவில் அவர் உயிரிழந்தார்.

சசிகரனின் உடல், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

புத்தாண்டு தினத்தில் இடம்பெற்ற இந்த மரணச் சம்பவத்தால் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 37ஆம் கிராமப் பகுதி முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சட்டமா அதிபரின் பொறுப்பு

இரண்டு வருடங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டு நடத்த முடியாமல் போன உள்ளூராட்சித் தேர்தலை இப்போது நடத்தக் கூடிய வாய்ப்பு ஓரளவு சாதகமாகி வருகிறது. ஆனாலும் அந்தத் தேர்தலை நீதி, நேர்மையாகவும், சகலருக்கும் சமச்சரான வாய்ப்புக் கிட்டும் விதத்திலும் தேர்தல் ஆணையம் நடத்தி முடிக்குமா என்ற கேள்வி - சந்தேகம் - எழுந்திருக்கின்றது.

இது விடயத்தில் தேர்தல் ஆணையமும் சட்டமா அதிபர் திணைக்களமும் விவகாரங்களை சொதப்பி வருகின்றமை குறித்து இப்பத்தியிலும், நமது காலை, மாலை இதழ்களிலும் தொடர்ந்து தகவல்களை வெளியிட்டு வருகிறோம். உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான வேட்பு மனுத் தாக்கலையொட்டி இடம்பெற்ற குளறுபடிகளை தொடர்ந்து விளக்கி வருகிறோம். ஒரு சமச்சீரற்ற நிலையில் - ஒழுங்கற்ற முறையில் - இத்தேர்தல் நடைபெற்று முடியப் போகின்றது என்பதை தொடர்ந்து எச்சரித்து வருகிறோம்.

இந்தத் தேர்தலுக்கு இன்னும் மூன்று வாரங்கள்தான் உள்ளன. இன்னும் ஒரு வாரத்தில் தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகிவிடும். அதற்கு இடையில் தேர்தலை ஒட்டிய குழப்பங்களை விரைந்து சீர் செய்வதில் சட்டமா அதிபர் திணைக்களமும் தேர்தல் ஆணையமும் கரிசனை கொள்ள வேண்டும் என்று பல தடவைகள் சுட்டிக்காட்டி உள்ளோம்.

இப்போது இலங்கையில் அதிகம் மதிக்கப்படுகின்ற சட்ட நிபுணர்களில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனும் இவ்விடயத்தை வெளிப்படையாகச் சொல்லியிருக்கின்றார்.

தேர்தல் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஒட்டி நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புகள் ஒன்றுக்கு ஒன்று முரணானவையாக - தலைகீழானவையாக - வந்திருக்கின்றன. உயர் நீதிமன்றமும் மேன்முறையீட்டு நீதிமன்றமும் நேரடி முரண்பாடான தீர்ப்புகளை வழங்கி உள்ளன. இதனால் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் சில தரப்புகளுக்கு நிவாரணமும், அதேபோன்ற நிலைமைகளைக் கொண்ட வேறு சில தரப்புகளுக்கு நிராகரிப்பும் இடம்பெற்றிருக்கின்றன. இது வெளிப்படையாக - அப்பட்டமாக - தெரியும் விடயம்.

உடனடியாக இந்த விடயத்தை உயர் நீதிமன்றின் கவனத்துக்கு எடுத்துச் சென்று நிலைமையைச் சீராக்க வேண்டியது சட்டமா அதிபரின் பொறுப்பும் கடமையும் என்று சுமந்திரன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

தேர்தல் சமச்சீரற்ற முறையில் நடந்து முடிவதை தவிர்ப்பதற்காக சட்டமா அதிபர் இவ்விடயங்களை உடனடியாக காலம் தாழ்த்தாமல் உயர் நீதிமன்றுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்தத் தேர்தலில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்த அனைவருக்கும் ஒரே விதமாக சட்டமும் ஒழுங்கு விதிகளும் பேணப்படுகின்றமையையும், சமச்சீரான முறையில் தேர்தல் நடத்தப்படுவதையும் உறுதிப்படுத்துவதில் தேர்தல் ஆணையம் உறுதியாக இருக்க வேண்டும். அந்த ஆணையத்திற்காக நீதிமன்றத்தில் முன்னிலையாகும் சட்டமா அதிபர் பொறுப்போடு செயல்பட வேண்டும். நாட்டில் தேர்தல் நடத்தப்படுவதற்கும் தமக்கும் நேரடித் தொடர்பில்லை என்ற மாதிரி சட்டமா அதிபர் செயற்பட முடியாது. செயற்படக் கூடாது.

சமச்சீரற்ற முறையில் - முரண்பாடான விதத்தில் - தீர்ப்புகள் வழங்கப்பட்டு, தேர்தல் நடக்க முன்னரே சில தரப்புகள் பாதிக்கப்பட, சில தரப்புகள் மேலதிக சாதக நிலையை பெற்றமை போன்ற ஒரு சூழல் உருவாகி இருக்கின்றது. இதை தவிர்க்கச் செய்வதில் - நீதி, நியாயமாகத் தேர்தல் நடத்தப்படுவதை உறுதி செய்வதில் - சட்டமா அதிபரின் பங்கும் கணிசமானது.

அதையே சுமந்திரன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

இந்த விவகாரத்தைத் தாங்களும் தேர்தல் ஆணையமும் மட்டும் தங்களுக்குள் ஊடாடிக் கையாளும் விடயமாகக் கருதி சட்டமா அதிபர் வாளாவிருந்து விட முடியாது. அவர் நாட்டுக்கும், சட்டத்துக்கும், நீதிமன்றங்களுக்கும், தேர்தலில் போட்டியிடும் தரப்புகளுக்கும, மக்களுக்கும் பதில் கூறும் தார்மீகக் கடப்பாடு உடையவர் என்பதை மறந்து விடக் கூடாது. என்ன செய்யப் போகிறார் சட்டமா அதிபர்? நாடு பார்த்திருக்கின்றது. காத்திருக்கின்றது.



# கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இன்று வெப்பநிலை காணப்படும்

நாட்டின் பல பகுதிகளில்இன்று மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், தென், கிழக்கு மாகாணங்களிலும், இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் வெப்பநிலை இருக்கும் என அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை நாளை மேல், சப்ரகமுவ, மத்திய, தென் மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பிற்பகல் அல்லது இரவு நேரங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேல் மாகாணத்திலும், காலி, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் காலை வேளைகளில் மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், பொலன்னறுவை மாவட்டத்திலும் காலை வேளையில் சில இடங்களில் மூடுபனியுடன் கூடிய வானிலை எதிர்பார்க்கப்படலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# தேர்தல் முறைப்பாடுகள் தொடர்ந்தும் அதிகரிப்பு




கடந்த 24 மணிநேரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் மற்றும் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 5 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளண என தெரிவித்துள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் கடந்த 24 மணிநேரத்தில் வேட்பாளர் ஒருவரும் 6 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

இதனிடையே, கடந்த 3 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தினை மீறியமை மற்றும் வன்முறைகள் தொடர்பில் 127 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

அத்துடன், இதுவரையில்15வேட்பாளர்களும், 52 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம், இந்த காலப்பகுதியில் 12 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன என பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த மாதம் 20 ஆம் திகதியிலிருந்து இதுவரையில் 1,206 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

























# சித்திரை கோடைத் திருவிழா

சக்தி TV, கனடா தமிழ் One TV ஊடக அனுசரணையில் A one Media solution இன் ஏற்பாட்டில் “சித்திரை கோடைத் திருவிழா 2025” வல்வெட்டித்துறை ரேவதி கடற்கரையில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நடைபெற்றது.

இதன்போது வடக்கு மாகாண ஆண், பெண் அணிகளுக்கான கபடிப் போட்டிகள் நடைபெற்றன.

யாழ். கபடி சங்கம் மற்றும் வல்வை விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

வெற்றி பெற்ற ஆண், பெண் அணிகளுக்குப் பணப்பரிசுகள் வழங்கப்பட்டன.

மேலதீக படங்கள் தொடர்ச்சி▼



Main Sponsors Rexona Signal AERO COURIER Fast & Secure World Wide Service
Event Sponsors CONSOLIDATED Academic Lanka (Pvt) Ltd
Community Strength Sponsors
Digital Media Support வடலி
Abans | Audio Your Partner in Premium Entertainment.
Media Sponsors சக்தி வீரகேசரி VIRAKESARI THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA முரசு







# சித்திரை கோடைத் திருவிழா



















Main Sponsors Rexona Signal AERO COURIER Fast & Secure World Wide Service
Event Sponsors CONSOLIDATED Academic Lanka (Pvt) Ltd
Community Strength Sponsors
Digital Media Support வடலி MEDIA
Abans | Audio Your Partner in Premium Entertainment.
Media Sponsors சக்தி TV VIRAKESARI வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA முரசு



# அறிவகத்தில் தமிழ்ப் புத்தாண்டு தினமான நேற்று கைவிசேஷம் வழங்கலும் ஏடு தொடக்கல் நிகழ்வும்

தமிழ்ப் புத்தாண்டு நாளான நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரனினதும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயமுமான அறிவகத்தில் சமய வழிபாடுகளுடன் சுப நேரத்தில் கைவிசேஷம் வழங்கலும், ஏடு தொடக்கல் நிகழ்வும் நடைபெற்றது..........















# ஏப்ரல் மாதத்தின் முதல் 9 நாள்களில் 56,567 சுற்றுலாப் பயணிகள் வருகை

2025 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்தின் முதல் 9 நாள்களில் 56,567 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 778,843 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 128,910 ஆகும்.

மேலும், ரஷ்யாவிலிருந்து 99,731 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 77,384 சுற்றுலாப் பயணிகளும், ஜெர்மனியிலிருந்து 53,920 சுற்றுலாப் பயணிகளும்,சீனாவிலிருந்து 41,478 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 46,289 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 31,390 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.





# திருகோணமலை பத்திரகாளி கோவிலில் நேற்று புதுவருடத்தை ஒட்டி வழிபாடுகள்

**(எஸ்.கீதபொன்கலன்)**

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டு நேற்று திங்கட்கிழமை திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை நிகழ்வுகளையும், பக்த அடியார்கள் புத்தாடை அணிந்து வழிபாட்டில் ஈடுபடுகின்றமையையும் படங்களில் காணலாம்.









# வவுனியாவில் நீரில் மூழ்கிப் பலியான இளைஞரின் சடலத்தை பேண முடியாத நிலையில் வைத்தியசாலையின் பிரேத அறை!





(கி.வசந்தன்)

வவுனியா, தவசிகுளம் பகுதியில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் குளித்துக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் முழ்கியதில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, சிதம்பரபுரத்தில் தற்காலிகமாக வசித்து வந்த இளைஞர் ஒருவர் தவசிகுளம் பகுதியில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்திற்கு தனது உறவினர்களுடன் வருகை தந்திருந்த நிலையில் நீச்சல் குளத்தில் இறங்கிக் குளித்துள்ளார்.

இதன்போது, அவர் நீரில் மூழ்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அந்த இளைஞரை அங்கிருந்தவர்கள் உடனடியாக மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி சாவடைந்துள்ளார்.

சம்பவத்தில் கண்டி, நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞரே சாவடைந்துள்ளார். இவர் வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டில் இருந்து வர்த்தக நிலையம் ஒன்றில் வேலை செய்து வந்தவர்.

வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்த குளிரூட்டி கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக இயங்காமையால் இளைஞரின் சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்காக பிரேத அறையில் வைக்க முடியாது எனவும், இறந்தவரின் உறவினர்களை வாகனம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி செட்டிகுளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஒப்படைக்குமாறும், இன்று மீண்டும் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வருமாறும் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது, குடும்பத்தினர் தமது குடும்ப நிலை காரணமாக சடலத்தை செட்டிகுளம் வைத்தியாலைக்குக் கொண்டு செல்ல வாகனத்தை வாடகைக்கு அமர்த்த முடியாத நிலையில் அவதிப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் செய்தி அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் அந்தக் குடும்பத்தின் நிலமையை அறிந்து, வன்னி மாவட்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனின் கவனத்திற்கு விடயத்தை கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து உடனடியாக வவுனியா வைத்தியசாலைக்கு வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், இறந்த இளைஞரின் உறவினர்களுடன் கலந்துரையாடினார். சம்பவம் தொடர்பில் கேட்டறிந்த பின் வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரின் கவனத்திறகு விடயத்தை கொண்டு வந்தமையுடன், வைத்தியசாலையால் பொறுப்பேற்கப்பட்ட சடலத்தை செட்டிகுளம் அனுப்பி அதனை மீள பெற வேண்டியது வைத்தியசாலையின் பொறுப்பு எனச் சுட்டிக் காட்டினார். அத்துடன் வவுனியாவின் பிரதான வைத்தியசாலையின் பிரேத அறை குளிரூட்டி நீண்ட நாளாக பழுதடைந்து இருந்தால் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் விளக்கம் கோரியிருந்தார். இதனையடுத்து வைத்தியசாலையால் சடலம் பொறுபேற்கப்பட்டு செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்று உடற்கூற்று பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும். சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE

# சம்மாந்துறைப் பிரதேச சபையில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக வானொலிப் பெட்டி

## அடித்துக் கூறுகிறார் அக்குழுவின் தலைமை வேட்பாளர் நஸார்






**(பாறுக் ஷிஹான்)**

சம்மாந்துறை பிரதேச சபையில் ஆட்சியைத் தீர்மானிக்கின்ற சக்தியாக வானொலி பெட்டி விளங்கும் என்று வருகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இப்பிரதேச சபைக்கு வானொலி பெட்டி சின்னத்தில் போட்டியிடுகிற சுயேச்சை குழு - 03 இன் தலைமை வேட்பாளர் சமூக சேவையாளர் எஸ். எல்.ஏ.நஸார் உறுதிபடத் தெரிவித்தார்.

இச்சுயேச்சை குழுவின் தேர்தல் அலுவலக திறப்பு விழா நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சம்பிரதாயபூர்வமாக இடம்பெற்றது. பேரணியாக வேட்பாளர்கள் வெடி ஆரவாரங்களுக்கு மத்தியில் அழைத்து வரப்பட்டு மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

சமய அனுட்டானங்களைத் தொடர்ந்து வேட்பாளர்கள் அறிமுகம் இடம்பெற்றது. தொடர்ந்து இச்சுயேச்சை குழுவின் பிரசார பீரங்கியும், சமூக, பொதுநல, அரசியல், ஊடக செயற்பாட்டாளருமான அஹமட் புர்கான் சிறப்புரை மேற்கொண்டார்.

பிற்பாடு சுயேச்சைக் குழுத் தலைவரும், தலைமை வேட்பாளருமான நஸார் பேசியபோது மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சம்மாந்துறை மண்ணும், மக்களும் இன்று ஏதிலிகளாக உள்ளார்கள். காரணம் கடந்த 30 வருடங்களாக காங்கிரஸ்காரர்கள் உள்ளிட்ட கட்சிக்காரர்கள் எமது மண்ணையும், மக்களையும் தொடர்ந்தேச்சையாக ஏமாற்றி வந்துள்ளார்கள். இனியும் ஏமாற்ற காத்திருக்கின்றார்கள்.

எமது மண் மாட்சி பெற வேண்டும்.

தொடர்ச்சி ▼



# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# சம்மாந்துறைப் பிரதேச சபையில் ஆட்சியை தீர்மானிக்கும் சக்தியாக வானொலிப் பெட்டி







**தொடர்ச்சி ▲**

எமது மக்கள் மீட்சி பெற வேண்டும். அதற்கு காங்கிரஸ்காரர்கள் உள்ளிட்ட கட்சிக்காரர்களின் சூழ்ச்சிகளில் இருந்து விடுபட வேண்டி உள்ளது. ஆகவேதான் எமது மண்ணையும், மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்கிற சமூக நோக்கத்தை முன்னிறுத்தி பிரதேச சபைக்கு சுயேச்சையாக போட்டியிடுகின்றோம்.

சம்மாந்துறை தொகுதி மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்ய கூடிய அளவுக்கு வாக்கு வலிமையை கொண்டது. ஆனால் சம்மாந்துறை தொகுதிக்கு அண்மைய காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர்ச்சியாகக் கிடைப்பதாக இல்லை.

ஆனால் எமது மக்களின் வாக்குகளை வைத்து வேறு தொகுதிகளை சேர்ந்தவர்கள் எம். பிக்களாக வருகின்றனர். அவர்கள் எமது மண்ணையும், மக்களையும் கண்டு கொள்வதே இல்லை. இந்த நிலை மாற வேண்டும்.மாற்றம் ஒன்றே முன்னேற்றத்துக்கான வழி.

அந்த அரசியல்வாதிகள்தான் நாம் இன்று தேர்தல் கேட்பதற்கான காரணம் ஆவர். சம்மாந்துறைப் பிரதேச சபையில் இருந்து மாற்றம் உருவாக வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. சம்மாந்துறை பிரதேச சபையில் ஆட்சியைத் தீர்மானிக்கிற சக்தியாக வானொலிப் பெட்டி விளங்கும்.

நாட்டு மக்கள் ஒருமித்து கடந்த நாடாளுமன்ற தேர்தலில் திசைகாட்டிக்கு வாக்களித்தார்கள். அதே போல சம்மாந்துறை பிரதேச மக்கள் ஒருமித்து வானொலிப் பேட்டிக்கு வாக்களிக்கின்ற பட்சத்தில் எம்மால் பிரதேச சபையில் ஆட்சியை உருவாக்கி நடத்தவும் முடியும் என்றார்.

# எமது ஆட்சியில் ஊழலிருந்தால் வெளிக்காட்டுங்கள்

## அரசாங்கத்திற்கு முன்னாள் தவிசாளர் நிரோஷ் சவால்




தங்கள் கட்சி அரசியல்வாதிகளைத் தவிர ஏனைய அரசியல்வாதிகளை ஊழல்வாதிகள் என்று குற்றஞ்சாட்டும் இந்த அரசாங்கம் முடிந்தால் நாம் கடந்த ஐந்து ஆண்டுகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையை நிர்வாகம் செய்துள்ள நிலையில் அங்கு ஊழல்கள் இடம் பெற்றிருந்தால் அதனைக் கண்டு பிடியுங்கள் என முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

தமது கட்சி ஆட்சி அமைத்தால் மாத்திரமே ஊழலுக்கு எதிராக செயற்பட முடியும் என்று அரசாங்கம் பொய் பேசி வருகின்றது. ஏனைய சகல அரசியல் தரப்பினரையும் ஊழல்வாதிகள் போல் கூறுகின்றது.

நாம் கடந்த ஐந்து ஆண்டுகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையை நிர்வாகம் செய்திருக்கின்றோம். அதற்கு முன்னரும் மக்கள் பிரதிநிதிகளாக இருந்திருக்கின்றோம். இந்நிலையில், பதவியில் உள்ள அரசாங்கம் என்ற வகையில் நீங்கள் எம்மால் ஊழல்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அல்லது துஷ்பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் தாராளமாக கணக்காய்வு செய்து வெளிக்கொண்டு வருங்கள்.

கிராமங்கள் தோறும் மேடைகளை அமைத்து ஜனாதிபதி மற்றும் பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என சகலரும் தம்மைத் தவிர ஏனையவர்கள் சகலரும் ஊழல்வாதிகள் என்கின்றனர். தாம் சபைகளை கைப்பற்றினால் மாத்திரமே கிராமங்களைக் கட்டியெழுப்ப முடியும் என்கின்றனர்.

நான் ஐந்து ஆண்டுகள் உள்ளுராட்சி மன்றத்தின் தவிசாளர் பதவியில் நிறைவேற்று அதிகாரியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டு தொங்கு நிலைச் சபை ஒன்றினை நடத்தியுள்ளேன். பல தமிழ்க் கட்சிகளும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கியுள்ளன. ஆட்சிக்கு ஆதரவளித்தோர் தமது நலனுக்காக ஆதரவளிக்கவில்லை. சலுகைகளுக்காக ஆதரவளிக்கவில்லை. இந்நிலையில் எம்மை பிரதேச சபைக்கு அனுப்பிய மக்கள் மற்றும் தவிசாளராகத் தெரிவு செய்த ஏனைய கட்சிகளினது உறுப்பினர்கள், தவிசாளராக தெரிவு செய்த கட்சி என சகலரதும் கௌரவமும் நீங்கள் எழுந்தமானமாக முன்வைக்கும் விமர்சனங்களால் பாதிக்கப்படக்கூடாது. – என வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்









# அரசாங்கத்தின் பொய்களால் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

இலவச மருத்துவம் என்ற மக்களின் உரிமையைக் கூட தற்போதைய அரசாங்கம் மீறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு – பல்லன்சேன பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சுகாதாரம் என்பது வெறுமனே சேவையல்ல எனவும் அது மனித உரிமையும், அடிப்படை உரிமையுமாகும். இன்று அரச வைத்தியசாலைகளில் அத்தியாவசிய மருந்துகள் இல்லை.

இலவச மருத்துவ சேவை காணப்படும் வைத்திய சாலைகளில் மருந்துகள் இல்லாமையினால் உயிர்காக்கும் மருந்துகளைக் கூட தனியார் மருந்தகங்களில் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் பதில் இல்லை.

இன்று நாட்டு மக்களின் வருமான மூலங்கள் வீழ்ச்சியடைந்து, வாழ்வாதாரங்கள் வீழ்ச்சியடைந்து, வருமானம் கூட குறைந்துள்ள இந்த வேளையில், பொருட்களின் விலைகளும், வாழ்க்கைச் செலவுகளும் வேகமாக அதிகரித்து வருகின்றன.

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் தமது பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்கக்கூட முடியாத நிலை உருவாகி வருகிறது.

ஜே.வி.பி தேர்தல் காலத்தில் நல்ல வருமானத்தைப் பெற்றுத் தந்து, பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வோம் என வாக்குறுதி அளித்தது.

எனினும், இன்று வறுமை அதிகரித்து வருகின்றது. மேடைகளில் மக்களுக்காக கோஷங்கள் எழுப்பினாலும், ஆட்சிக்கு வந்த பின்னர் அதன் பிரகாரம் செயல்படத் தவறியுள்ளனர். வெறும் பேச்சு, பொய்களால் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்.” என்றார்.





# பொன்முடி மீது நடவடிக்கை எடுக்க தமிழக முதல்வர் ஸ்டாலினுக்குப் பயம்

## நயினார் நாகேந்திரன் விமர்சனம்



“தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், அமைச்சர் பொன்முடி மீது நடவடிக்கை எடுக்க பயப்படுகிறார். ஒவ்வொரு வீட்டு பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் பொன்முடியின் பேச்சை கவனத்தில் கொண்டு வரும் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிக்க வேண்டும்,”

– இவ்வாறு பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திருநெல்வேலி வடக்கு மாவட்ட பா.ஜ.க. சார்பில் திருநெல்வேலி சந்திப்பு பஸ் நிலையம் முன்புள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து நயினார் நாகேந்திரன் அஞ்சலி செலுத்தினார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

“இந்த நாள் எனக்கு மிகவும் ராசியான நாள். கடந்த 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதே நாளில் அம்பேத்கர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து விட்டு நெல்லை எக்ஸ்பிரஸில் சென்னைக்கு புறப்பட்டு சென்றேன்.

அப்போது முன்னாள் முதல்வர் ஜெயலலிதா எனக்கு நெல்லை சட்டப்பேரவை தொகுதியில் வேட்பாளராக போட்டியிட வாய்ப்பை வழங்கினார். அதிலிருந்து 25 ஆண்டுகளான நிலையில் தற்போது பிரதமர் மோடி மற்றும் தேசிய தலைவர் நட்டா, உள்துறை அமைச்சர் அமித்ஷா ஆகியோர் தமிழகத்தின் பா.ஜ.க. தலைவர் என்ற மிகப் பெரிய பொறுப்பினை எனக்கு வழங்கியுள்ளனர். அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியவர் அம்பேத்கர். ஆனால் அரசியல் சாசன சபையில் அம்பேத்கருக்கு இடத்தை கொடுக்க காங்கிரஸ் மறுத்தது. அம்பேத்கர் என்ன செய்தார் என்பதை அனைவரும் அறிய வேண்டும்.

அவரது நினைவிடங்களை கூட காங்கிரஸ் பராமரிக்கவில்லை. மத்தியில் பா.ஜ.க. பொறுப்பேற்ற பின்னர் அம்பேத்கரின் நினைவாலயம் உள்ளிட்ட பல்வேறு இடங்கள் புதுப்பிக்கப்பட்டன. தமிழகத்தில் அம்பேத்கர் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களை சிறைச்சாலையில் அடைப்பதுபோல் கூண்டில் வைத்து அடைத்துள்ளார்கள். இதனை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி எந்த இழுபறியும் இல்லாமல் அமைந்துள்ளது. தேர்தலுக்கு இன்னும் ஓராண்டு காலம் உள்ளது. துணை முதல்வர் பதவி உள்ளிட்டவைகள் குறித்து இப்போதைக்கு எந்த பேச்சு வார்த்தையும் நடத்தவில்லை.

அமைச்சர் பொன்முடி பேசிய பேச்சு அரசமைப்பு சட்டத்திற்கு எதிரானது. அமைச்சர் பொன்முடியின் பேச்சை ஒவ்வொரு வீட்டு பெண்மணி மட்டுமல்லாது ஒவ்வொரு வீட்டின் ஆண்மகனும் நினைத்து பார்க்க வேண்டும். 2026 இல் அதனை நினைத்து பார்த்து தேர்தலில் வாக்களிக்க வேண்டும். அமைச்சர் பொன்முடி மீது நடவடிக்கை எடுக்க தமிழக முதல்வர் பயப்படுகிறார்.

போக்குவரத்து துறை பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியத் துறை என்பதனால் அரசு எடுத்து நடத்துகிறது. போக்குவரத்து துறையில் ஏற்படக்கூடிய நஷ்டத்தை அரசு முறையாக நிதி ஒதுக்கி செய்து நிவர்த்தியாக்கி கொடுக்க வேண்டும்.” என்றார்.

# தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம்

தமிழகத்தில் நேற்று நள்ளிரவு முதல் மீன்பிடித் தடைக்காலம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் ஜுன் 14 ஆம் திகதி வரை 61 நாள்களுக்கு மீன்பிடி தடைக்காலம் அமுலில் இருக்கும் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த காலப்பகுதி வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக்கு நீரிணை பகுதிகளில் மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்களின் இனப் பெருக்க காலமாக மத்திய மீன்வளத் துறை அமைச்சு கண்டறிந்துள்ளது.

மீன்வளத்தை பெருக்கும் நோக்கத்தில் இந்தக் காலகட்டத்தில் விசைப் படகுகள்மற்றும்இழுவைப்படகுகள்மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்படுகிறது.

இந்த தடைக்காலத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளில் 2,000 விசைப்படகுகள் மீன்பிடி இறங்குதளங்களில் நங்கூரமிடப்பட்டு நிறுத்தப்படும்.

மீன்பிடித் தடைக்காலத்தின் போது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படுவதை கருத்தில் கொண்டு மீனவ குடும்பங்களுக்கு தலா 8,000 இந்திய ரூபா வழங்கப்படுகின்றது.

# 1,800 கோடி ரூபா மதிப்புள்ள போதைப்பொருள் பறிமுதல்



குஜராத் கடற்கரை பகுதியில் கடல் வழியாக கடத்துவதற்கு தயாராக இருந்த 1,800 கோடி இந்திய ரூபா மதிப்பிலான போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குஜராத் மாநிலம், கடற்கரை பகுதியில் போதைப்பொருள்கள் கடத்தப்படுவதாக இந்திய கடலோர காவல்படையினருக்கு தகவல் கிடைத்தது. அதன்படி கடற்கரை பகுதியில், இந்திய கடலோர காவல்படையினர், குஜராத் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸாருடன் இணைந்து சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது 300 கிலோ போதைப் பொருள் கடத்துவதற்கு தயாராக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, 1,800 கோடி இந்திய ரூபா மதிப்பிலான 300 கிலோ போதைப்பொருள்களை இந்திய கடலோர காவல்படையினர் பறிமுதல் செய்தனர். ஏப்ரல் 12,13 ஆகிய திகதிகளில் நடந்த சோதனையில் போதைப் பொருள்கள் கடத்தப்படுவது முறியடிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து குஜராத் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸ் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சல்மான்கானுக்கு வெடிகுண்டு மிரட்டல்



பொலிவுட் நடிகர் சல்மான் கானுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சல்மான் கான் தற்போது மும்பையில் வசித்து வருகிறார்.

கடந்த ஆண்டும் அவரது வீட்டிற்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

இந்நிலையில் தற்போது அவருக்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.




# அனைத்து இஸ்ரேலிய கைதிகளையும் விடுவிக்கத் தயாராகிறது ஹமாஸ் அமைப்பு

தீவிரமான கைதிகள் பரிமாற்றத்திற்கு ஈடாக அனைத்து இஸ்ரேலிய பணயக் கைதிகளையும் விடுவிக்க ஹமாஸ் தயாராக இருப்பதாக ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காசாவில் போரை முடிவுக்குக் கொண்டுவர இஸ்ரேல் உத்தரவாதம் அளிக்கவும் ஹமாஸ் படை கோரியுள்ளது.

மேலும், எகிப்து மற்றும் கத்தாரின் மத்தியஸ்தர்களுடன் கெய்ரோவில் ஹமாஸ் அதிகாரிகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சின்னாபின்னமாகியுள்ள காசாவில் போர்நிறுத்தத்தை ஏற்படுத்த அமெரிக்காவுடன் இணைந்து இந்த இரண்டு நாடுகளும் செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மூத்த ஹமாஸ் அதிகாரி தாஹெர் அல்-நுனு தெரிவிக்கையில், தீவிரமான கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தம், போரை முடிவுக்குக் கொண்டுவருதல், காசா பகுதியிலிருந்து இஸ்ரேலியப் படைகள் திரும்பப் பெறுதல் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குதல் ஆகியவற்றிற்கு ஈடாக அனைத்து இஸ்ரேலிய பணயக் கைதிகளையும் விடுவிக்க நாங்கள் தயாராக உள்ளோம் என தெரிவித்துள்ளார்.

ஆனால், போர்நிறுத்தம் ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் இஸ்ரேல் தொடர்ந்து தடைகளை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், பிரச்சினை கைதிகளின் எண்ணிக்கை அல்ல, மாறாக இஸ்ரேல் அதன் உறுதிமொழிகளை மீறுகிறது, போர்நிறுத்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதைத் தடுக்கிறது மற்றும் போரைத் தொடர்கிறது என்பதே பிரச்சினை என்று நுனு கூறியுள்ளார்.

இதனிடையே, இஸ்ரேல் தரப்பு ஹமாஸ் படைகளுக்கு முன்மொழிதல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், இஸ்ரேல் இரண்டாம் கட்ட போர்நிறுத்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் என்ற அமெரிக்காவின் உத்தரவாதத்திற்கு ஈடாக, ஹமாஸ் படைகள் 10 உயிருடன் இருக்கும் பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும்.

மேலும். ஹமாஸ் படைகள் ஆயுதம் ஏந்தியது பேச்சுவார்த்தைகளுக்காக அல்ல என்றும் நுனு தெரிவித்துள்ளார்.

# ட்ரம்பினால் விதிக்கப்பட்டுள்ள வரியை முற்றாக ரத்து செய்ய வேண்டும்; சீனா



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் விதிக்கப்பட்டுள்ள வரியை முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும் என சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலக நாடுகள் பலவற்றுக்கான பரஸ்பரத் தீர்வை வரியை அமெரிக்க ஜனாதிபதி அண்மையில் அறிவித்தார்.


இது கடந்த வாரங்களில் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், 90 நாள்களுக்கு அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் சீனாவுக்கு விதிக்கப்பட்ட வரிகளை 145 சதவீதமாக டொனால்ட் ட்ரம்ப் அதிகரித்துள்ளார்.

இந்தநிலையில், இந்த நடவடிக்கைக்குச் சீனா தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா தமது தவறுகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பரஸ்பர வரிகள் என்ற தவறான நடைமுறையை முற்றிலுமாக ரத்து செய்ய வேண்டும் எனச் சீனாவின் வர்த்தக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பசிபிக் தீவில் நிலநடுக்கம்!

பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவு நாடான பிஜியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

6.5 ரிக்டர் அளவிலான இந்த நிலநடுக்கம் பூமியின் மேற்பரப்பிலிருந்து சுமார் 174 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கம் நேற்று உள்ளூர் நேரப்படி காலை 8.00 மணியளவில் ஏற்பட்டதுடன், நிலநடுக்கத்தால் சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 15.04.2025




இன்றைய நாள் சிறப்பாக இருக்கும் உங்கள் மனதில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும். அதனால் நன்மை ஏற்படும்.

இன்று பரபரப்பாக காணப்படுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் காணப் படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பூர் வீகச் சொத்து வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சமநோக்கு நாளாக அமையும். இன்று புதிய நண்பர்கள் மற்றும் புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் பணிகளை தன்னம் பிக்கையுடன் மேற்கொள்வீர்கள் மற்றும் கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்வீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை அதிக வாய்ப்புகள் காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரும்.

இன்று ஆரோக்கியமாக இருப்பதற்கான வலிமை உங்களிடம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று அதிர்ஷ்டமான நாள். இன்று எதிர்ப்படும் எந்தத் தடைகளையும் நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள். இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக நடக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக குறித்த நேரத்துக்கும் உங்கள் பணிகளை செய்து முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொண்டிருப்பீர்கள். இதனால் இருவரும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

இன்று அதிக பணம் சம்பாதிப்பதற்கான திறமை உங்களிடம் காணப்படும். உங்களிடம் காணப்படும் பணத்தை ஆக்கப்பூர்வமான விஷயங்களுக்கு செலவு செய்து திருப்தியடைவீர்கள்.




நீங்கள் இன்று கடைசி நிமிடத்தில் வாய்ப்பை இழப்பீர்கள். அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் பணிகளில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமுடன் பணி யாற்ற வேண்டியது அவசியம். இன்று ஓய்வின்றி பணி கள் செய்ய நேரும்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்ச்சிவயப்பட்ட மனநிலையை வெளிப்படுத்துவீர்கள். நட்பான அணுகு முறை மேற்கொள்வது நல்லது.

இன்று அதிக பணம் செலவு செய்வீர்கள். இன்று சுதந் திரமாக நிதியைக் கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி அல்லது இருமல் பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் பொறுமை சோத னைக்குள்ளாகும் நாள். இன்று நல்ல பலன்களைக் காண புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும். பிரிய மானவர்களுடன் மோதல்கள் ஏற்படாமல் இருக்க கவனமாக தொடர்பு கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் பணிகளில் வெற்றி கிடைப்பது அரிது. கடின உழைப்பின் மூலம் மட்டுமே இன்று நன்மை கிடைக்கும். உங்கள சமயோசித புத்தியை பயன படுத்தி பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை கொள்வது நல்லது.உங்கள் சலிப்பு மனப்பான்மையை வெளிப்படுத்தாதீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.




இன்று உங்களுக்கு அதிர்ஷ்ட கரமான நாளாக அமையலாம். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதக மாக அமையும்.

இன்று உங்கள் பணியில் வெற்றி காண்பீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு பதவி உயர்வு தந்து பாராட்டுவார்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிபத்டுதுவீர்கள்.இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று கடின உழைப்பின் காரணமாக வெற்றி கிடைக் கும். இன்று ஊக்கத்தொகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. அதனால் மகிழ்ச்சியடைவீர்கள்.




உங்கள் உணர்ச்சிவசப்படும் போக் கின் காரணமாக நீங்கள் சில சிறந்த வாய்ப்புகளை இழக்க நேரலாம். எனவே இன்று நீங்கள் சாதுர்யமாக செயல்பட வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். சக பணியாளர்களுடனான உறவுமுறை சிறப்பாக இருக்காது. மனப்போக்கை மாற்றினால் நல்ல உறவை வளர்க்க முடியும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண பிப்பீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்துகொள்ள இதனை தவிர்க்க வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி குறைவாக இருக்கும். ஆரோக்கி யத்திற்கான கூடுதல் செலவுகள் காணப்படும்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கால்கள் மற்றும் மூட்டுக்களில் திடீரென்று வலிகள் ஏற்படலாம்.




எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன் சிறப்பாக திட்டமிட வேண்டும்.ஒரு முடிவை எடுக்கும் முன் பாதகம் ஏற்படா மல் இருக்க ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும், பெரியவர்களின் ஆலோசனையை கேட்பது நல்லது.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடின மாக உணர்வீர்கள்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடத் தில் வெளிப்படுத்துவீர்கள். இருவரும் மகிழ்வுடன் இருக்க இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக் காது. தேவையற்ற கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

பல் வலி பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 15.04.2025




இன்றைய நாள் சற்றே அனுகூலமாக இருக்கும். அதிர்ஷ்டத்தை விட சுய முயற்சியை சார்ந்திருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். ஓய்வுக்கு நேரம் கிடைப்பது அரிதாக இருக்கும். நல்ல விளைவுகளைக் காண பணிகளை திட்ட மிட வேண்டும்.

இன்று உங்களிடம் பதட்டமான உணர்வு காணப்படும். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். எனவே அமைதியான மன நிலை மேற்கொள்வது சிறந்தது.

குறைந்த அளவு பணமே காணப்படும். கூடுதல் செலவினங்கள் கவலையை அளிக்கும்.




இன்று மிகவும் அனுகூலமான நாள். உங்கள் மனம் அமைதியாக இருக்கும். விருப்பங்கள் நிறைவேறும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

பணியிடத்தில் சுமூகமான விளை வுகள் இருக்கும். உங்கள் திறமையை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக் கும்.

உங்கள் உறவு திருப்திகரமாக இருக்கும். வெளி யிடங்களுக்கு செல்வதன் மூலம் நல்லுறவை பரா மரிக்க முடியும்.

தொழில் செய்பவர்கள் நல்ல லாபம் காண்பார்கள். நிறுவனத்திற்கு புதிய தொடர்பாளர்கள் கிடைத்து அவர்கள் மூலம் லாபம் கிடைக்கும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். நீங்கள் இன்று விரைந்து செயலாற்று வீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறை வேறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

பணியில் உங்கள் முயற்சிக்கு பாராட்டைப் பெறுவீர்கள். உங்களுக் குள் இருக்கும் திறமை காரணமாக கொடுக்கப்பட்ட பணி களை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப் படும். நகைச்சுவை அணுகுமுறை உங்கள் உறவை வலுப்படுத்தும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத்தொகை பெறுவீர்கள். புதிய முதலீடு கள் செய்வதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்




இன்று திட்டமிட வேண்டியது அவசி யம். மனதில் சில குழப்பங்கள் ஏற்பட லாம். குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும். எந்த காரி யத்தையும் செய்வதற்கு முன் யோசிக்க வேண்டும்.

பணியிடத்தில் அதிர்ஷ்டம் கை கொடுக்காது. நீங்கள் கடின உழைப்பை சார்ந்திருக்க வேண்டும். உங்கள் திறமையும் கவனிக்கப்படாமல் இருக்கும். இது உங்க ளுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண பிப்பீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் கெடும். இத்தகைய சூழ்நிலையை தவிர்ப்பது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பணத்தை இழப்பீர்கள். நிதியைப் பொருத்தவரை முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். பணம் கிடைப்பது அரிதாக இருக்கும்.

# வடமராட்சியில் தமிழரசின் புத்தாண்டு









சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வடமராட்சிக் கிளை அலுவலகத்தில் பொங்கலும் கைவிசேடம் வழங்கும் நிகழ்வும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணி யும் கட்சியின் செயலாளருமான எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.